5. கவன ஈர்ப்புகள்.

(அ) கரூர் நகரில் உள்ள கோட்டையம்மன் தெரு தீ விபத்து.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் நகரிலுள்ள கோட்டையம்மன் தெருவில் 22—6—1980 அன்று நடந்த தீ விபத்தில் குடிசைகள், பள்ளிக் கட்டிடங்கள், தறிகள், சைக்கிளகள், ஸ்கூட்டர்கள் சேதமடைந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 21—6—1980 அன்று இரவு 12 மணியளவில் கரூரிலுள்ள கோட்டையம்மன் தோப்பில் நீலி மேட்டுத் தெருவில் ஏற்பட்ட தீ விபத்தில், 22 கூரை வேய்ந்த குடிசைகளும், 8 ஓட்டு வீடுகளும், ஒரு பள்ளிக் கட்டிடமும் பாதிக்கப்பட்டன 500 நபர்கள் பாதிக்கப்பட்டனர். 175 கைத்தறிகளும், 21 கைத்தறி பணி இல்லங்களாக பயன்படுத்தும் இடங்களும் சேதமுற்றன. உயிர்ச்சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பீடு ரூபாய் 6.75 இலட்சங்கள்.

2. வருவாய்த்துறை அலுவலர்கள் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களை பக்கத்திலுள்ள ஒரு பள்ளியில் தங்க வைத்து அவர்களுக்கு மூன்று நாட்கள் உணவு வழங்க ஏற்பாடு செய்தனர். பாதிக்கப்பட்ட 22 குடும்பங்களுக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிசைப் புனரமைப்பு நிவாரணத்தொகையாக ரூபாய் 100-ம், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும், ஒரு வேட்டி, ஒரு புடவையும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய தறிகள் கூட சேதமாகியிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது 100 ரூபாய், 5 கிலோ அரிசி, புடவை, வேட்டி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தொழில் செய்கிற தறிகள் சேதமாகி யிருக்கின்றன. அந்த் தறிகளுக்கென்று ஏதாவது தனியாக உதவிப்பணம் வழங்கியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட இலாக்கா அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.